**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 72/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | திரு. அங்கமுத்து |
| Father's Name/Husband Name: | | திரு. ஆறுமுகம் |
| Village | : | கள்ளப்பட்டி |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 47/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 4, 6 ஆஜர் இல்லை. அவர்களுக்காக 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கள்ளப்பட்டி கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையின் போது கடந்த 30.11.2018ம் தேதி அன்று மதியம் 3 மணியளவில் அ.சா.1ன் வீட்டிலிருந்த போது அ.சா.1ன் கணவர் வைத்துள்ள ோஹாட்டலில் நடந்த பிரச்சனை சம்மந்தமாக எதிரிகள் அ.சா.1டம் ஆபாசமாக பேசி வீட்டிற்குள் நுழைந்து அ.சா.1ன் கணவரைப் பற்றி கேட்டு உருட்டுக்கட்டையால் அ.சா.1ன் உடம்பில் அடித்து தலை முடியை பிடித்து இழுத்து கையிலும் உடம்பிலும்

முகத்திலும் அடித்து உன் கணவர் எப்படி கேஸ் கொடுப்பான் என்று கூறி தாக்கியதாகவும் உருட்டுக் கட்டையால் மாறி மாறி அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டி விட்டு சென்ற நிகழ்வினை நேரில் பார்த்தாக போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.